1994 ஏப்ரல் 21]

335–

பழனியில் தொழிற் பயிற்சிக் கல்லூரிஅமைத்தல்.

13849– திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா –

பழனியில் தொழிற் பயிற்சிக் கல்லூரி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியானது தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய தொகுதி என்பதோடு, பெருவாரியாக கிராம மக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொகுதி . அங்கே மாணவர்களுக்கு இப்பேர்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாததன் காரணமாக, அவர்கள் அல்லலுறக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில் கருணையோடு பரிசீலித்து இதை மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஏறத்தாழ அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் இரண்டு இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட 5 தொழில் பயிற்சி மையங்கள் இருக்கின்றன. மேலும் தற்போது நிதிநிலை நெருக்கடி காரணமாக தொடங்குவதற்கு இயலாமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக தொடங்கப்படவில்லை என்றாலும்கூட, தனியார்கள் ஒருவேளை முன்வந்தால் இந்த தொழில் பயிற்சி கல்லூரி அமைக்க அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 336, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

336–

வெம்பக்கோட்டை ஒன்றியம், குகன்பாறைக்கு குடிநீர் வசதி அளித்தல்.

***21059– திரு. ஜெ. பாலகங்காதரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், குக்ன்பாறை கிராமத்தில் போதிய குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வெம்பக்கோட்டை ஒன்றியம், குகன்பாறை கிராமத்திற்கு 15,000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் 1983-ல் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கான நீராதாரம் குறைந்துவிட்டதால் புதிய நீராதாரம் அமைக்கும் பொருட்டு ரூ.0.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிராதாரம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் நடைப்பெற்று வருகிறது.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் என்னென்ன சலுகைகள், எங்கெங்கே, எப்படி செய்ய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றையதினம் ஒரு நல்ல பதிலை தந்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் குகன்பாறை என்ற கிராமத்தைச் சுற்றி பாறை உள்ளதால் அங்கே தண்ணீர் ஆதாரம் கிடைக்க வாய்ப்பபே இல்லையென்ற சூழ்நிலையில், கிட்டத்தட்ட 4, 5 கிலோமீட்டர் தள்ளி தான் நீராதாரம் இருக்கிறது. அங்கேயிருந்துதான் இந்த குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்ற சூழ்நிலையில் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த தொகை என்பது மிகக் குறைந்த தொகையாகும். என்வே, அதனை அதிகரித்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து